கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் சிதம்பரம்

**அசல் வழக்கு எண்.198/2022**

The Oaths Act 1969 (Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 11.09.2025 நாளாகிய இன்று கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி திருமதி.E.Swetha, B.B.A., L.L.B.(Hons). அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்-

| தேதி | 11.09.2025 | சாட்சி | வா.சா. 2 |
|---|---|---|---|
| பெயர். | அஞ்சலை அம்மாள் | வயது.. | 90 |
| கணவர் பெயர். | கலியபெருமாள் | கிராமம்.. | நற்குணம் |

( சாட்சிக்கு வயது முதிர்ந்த காரணத்தினால் கேட்கும் திறன் குறைவாக இருந்த காரணத்தினாலும் கேள்விகள் வழக்கறிஞர் கேட்க நீதிமன்றம் சாட்சியிடம் எடுத்துரைத்து பதில்கள் பதிவு செய்யப்பட்டன.)

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு முதல் விசாரணை..**

நான் இவ்வழக்கில் 3 ம் நபர். வா.சா.2 ஆக சாட்சியம் அளிக்கிறேன். எனது முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். வாக்குமூலம் எனது அறிவுறுத்தலின் பேரில் தயார் செய்யப்பட்டது. வாக்குமூலத்தில் எனக்கு படித்து பார்த்து சரியென்று அறிந்து கைநாட்டு வைத்தேன். என் தரப்பில் ஆவணங்கள் தாக்கல் இல்லை.

**பிரதிவாதிகள் 2 முதல் 5 தரப்பில் குறுக்கு விசாரணை:**

மனோகரன் என்னுடைய மகன். வழக்கை எனது மகன் நிலத்திற்காக தாக்கல் செய்துள்ளார். வழக்கை எந்த நிலத்திற்காக தாக்கல் செய்துள்ளேன் அதன் விஸ்தீரணம் தெரியுமா என்றால் அது என்னுடைய நிலம் என் மகனுக்கு மாமனார் உயில் மூலமாக கிடைத்தது. என்னுடைய மாமனார் முத்துகுமரன் என்னுடைய மகனுக்கு உயில் எழுதி வைத்தபோது என்னுடைய மகனின் வயது என்னவென்றால் சுமார் 5 வயது இருக்கலாம். அப்போது என்னை guardian ஆக போட்டார்களா என்றால் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1ல் என்னை guardian என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு படிக்க தெரியாது. என்னுடைய மாமனார் உயிலை என்னை நம்பி என் மகனுக்கு காப்பளாராக உயிலை இயற்றி உள்ளார் என்றால் எனக்கு தெரியாது. புல எண்.331/7 11.5 ஏர்ஸ்(31 சென்ட்)

உயில் மூலமாக என் மகனுக்கு கொடுக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. கீழ்வளையமாதேவியில் உள்ள புல எண்.331/7 ல் அமைந்துள்ள 31 செண்ட் இடத்தை எனது மகன் பாதுகாவலாரக கிடைத்த சொத்தை பெரிய நற்குணத்தை சேர்ந்த ராஜவன்னியன் மகன் கலைச்செழியன்(minor)க்கு நான் கிரயம் கொடுத்துள்ளேன் என்றால் எனக்கு தெரியாது. 14.08.1972 ல் பெரிய நற்குணத்தை சேர்ந்த கலைச்செழியனுக்கு பதிவு செய்யப்பட்டு ஆவணத்தில் மூலம் கிரயம் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. கிரய ஆவணத்தை அனுசரித்து ராஜவன்னியன் மற்றும் கலைச்செழியன் ஆகிய இருவரும் ஆவண எண்.359/1991 பெரிய நற்குணம் கிராமத்தில் இருக்கும் பெருமாள் என்பவருக்கு கிரயம் கொடுத்தார் என்றாலும் அந்த கிரயத்தை அனுசரித்து பெருமாள் என்பவர் ஆவண எண்.1063/2013 பெருமாள் என்பவருக்கும் நித்யானந்தம் என்பவருக்கு பாகப்பிரிவினை ஏற்படுத்தி கொண்டார்கள் என்றாலும் அதனை அனுசரித்து ஆவண எண்.903/2020 1ம் பிரதிவாதிக்கு மேற்கண்ட பெருமாள், நித்யானந்தம் மற்றும் மணிகண்டன் ஆகிய மூவரும் கிரயம் கொடுத்தார்கள் என்றாலும் அதனை அனுசரித்து 1ம் பிரதிவாதி வருவாய் துறை ஆவணங்களில் அவருடைய பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. எனக்கு அனைத்து விவரங்களும் தெரியும் என்றாலும் வழக்கு சொத்தை கிரயம் கொடுத்து விட்டு தற்போது வழக்கிற்காகவும் வாதி என்னுடைய மகன் என்பதானலும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/- E.Swetha
Additional District Munsif
Chidambaram